4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1990—ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஈ) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு, 1990

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990—ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/1990) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் அமைக்கப்படுவதற்கான சட்டமுன்வடிவை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்து இருக்கிறார்கள். மனோன்மணியம் சுந்தரனார் அவர்களுடைய பெயரால் தென் மாவட்டங்களிலே இருக்கின்ற கல்லூரிகள், கல்விக்கூடங்கள் இவைகளையெல்லாம் இணைத்து ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்படுகின்ற இந்தத் தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நீராரும் கடலுடுத்த என்கின்ற தமிழ்த் தாய் வாழ்த்தை நமக்கு நல்கி தமிழ்கூறும் நல்லுலகம் பாராட்டுகின்ற வகையில் மனோன்மணியம் என்கின்ற மாபெரும் காவியத்தை நல்கிய அந்த மாபெரும் கவிஞனுடைய பெயரால் தென் மாவட்ட மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையை ஏற்கின்ற வகையில் இப்படிப்பட்ட பல்கலைக்கழகத்தை அமைப்பது மிகப் பொருத்தமாகவே அமைந்திருக்கிறது. என்று நான் கருதுகிறேன். இந்தப் பல்கலைக்கழகம் அமைக்கப்படுகின்ற வகையில், இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற சட்ட முன்வடிவில் ஒருசில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இந்தச் சட்ட

*9-5-1990 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.